TNED140008002021

Presented on : 20-10-2021
Registered on : 20-10-2021
Decided on : 06-07-2026
Duration : 4 years, 8 months, 17 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 22ம் நாள்
2026ம் ஆண்டு ஜூலை மாதம் 06ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.82/2021**

மாநில அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
அம்மாபேட்டை காவல் நிலையம்,
அம்மாபேட்டை.
(குற்ற எண். 242/2019). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. ராஜா, த/பெ.பெரியநாதகவுண்டர்.
2. அஜித், த/பெ. ராஜா,
3. நந்தினி, க/பெ. ராஜா,
4. அருள்ஜோதி, த/பெ. அர்ஜுனன்.
5. அர்ஜுனன், த/பெ. தாயகவுண்டர். ... எதிரிகள்

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | காவல் உதவி ஆய்வாளர்,<br>அம்மாபேட்டை காவல் நிலையம்,<br>அம்மாபேட்டை.<br>(குற்ற எண். 242/2019). |
| 2. | எதிரிகள் பெயர் | 1. ராஜா (47/2019),<br>த/பெ.பெரியநாதகவுண்டர்.<br>2. அஜித் (21/2019), த/பெ. ராஜா,<br>3. நந்தினி (25/2019), க/பெ. ராஜா,<br>4. அருள்ஜோதி (28/2019),<br>த/பெ. அர்ஜுனன்.<br>5. அர்ஜுனன் (59/2019)<br>த/பெ. தாயகவுண்டர். |



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:26:46 +0530

<table>
<tr><td>3.</td><td>எதிரிகள் முகவரி</td><td colspan="3">A1, A2, A3 – க.எண். 436, தோப்பபாளையம், கண்ணப்பள்ளி கிராமம், குருவரெட்டியூர், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.<br><br>A4, A5 – க.எண். 431, தோப்பபாளையம், கண்ணப்பள்ளி கிராமம், குருவரெட்டியூர், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.</td></tr>
<tr><td>5.</td><td>குற்ற நிகழ்வு நாள்</td><td colspan="3">17.11.2019</td></tr>
<tr><td>6.</td><td>புகார் தேதி</td><td colspan="3">18.11.2019</td></tr>
<tr><td>7.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">Anticipatory bail</td></tr>
<tr><td>9.</td><td>Commitment</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>10.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">Anticipatory bail as per Crl.MP No.2071/2019 dt.04.12.2019 on the file of the Hon'ble Principal District and Sessions Court, Erode</td></tr>
<tr><td rowspan="9">11.</td><td rowspan="9">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>14.11.2024</td><td>14.11.2024</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>14.11.2024</td><td>14.11.2024</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>27.11.2024</td><td>27.11.2024</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>27.11.2024</td><td>27.11.2024</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>27.11.2024</td><td>27.11.2024</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>18.06.2025</td><td>18.06.2025</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>23.09.2025</td><td>23.09.2025</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>23.09.2025</td><td>23.09.2025</td></tr>
<tr><td>12.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி</td><td colspan="3">06.10.2025</td></tr>
<tr><td>13.</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td colspan="3">06.07.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">06.07.2026</td></tr>
<tr><td>15</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம்</td></tr>
</table>



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:26:51 +0530

இவ்வழக்கு கடந்த 20.10.2021ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II திருமதி. P.கயல்விழி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E.செந்தில்குமார் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 17.11.2019ம் தேதியில், 16.00 மணியளவில், அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, கன்னப்பள்ளி கிராமம் தொப்பபாளையம் காட்டூரில் உள்ள சாட்சி.1 அய்யம்மாளுக்கு சொந்தமான சொக்கநாதர் தோட்டத்தில் சாட்சி.1க்கும் 1 முதல் 5 எதிரிகளுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக சாட்சி.1 அய்யம்மாள் தரப்பினருக்கும் கலகம் விளைவிக்கவேண்டும் என்கிற பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமாக ஒன்று கூடியுள்ளனர் என்றும், சட்டவிரோதமான கூட்டத்தில் உள்ள 1, 2, 5 எதிரிகள், கருக்கருவாள் மண்வெட்டி போன்ற அபாயகரமான ஆயுதங்களை பயன்படுத்தி கலகம் செய்துள்ளனர் என்றும், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் சாட்சி.1யை 1ம் எதிரி தேவிடியா கண்டாரோலி என்றும், 3ம் எதிரி தேவிடியா என்றும், சாட்சி.4 மாதையனை 2ம் எதிரி கேனத்தகூதி என்று பொது இடத்தில் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தகாத வார்த்தையால் திட்டியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 4, 5 திரிகள் பங்கு பெற்றுள்ளதாகவும், 1ம் எதிரி, சாட்சி.2யை கையால் கன்னத்தில் அறைந்தும், 3ம் எதிரி, சாட்சி.1யை கையால் கன்னத்தில் அறைந்தும், மற்றும் 4ம் எதிரி, சாட்சி.1யை காலால் எட்டி உதைத்தும், மேற்படி சாட்சிகளுக்கு மொக்கை காயத்தை எற்படுத்தியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 2, 5 பங்கு பெற்றதாகவும், 4ம் எதிரி,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:26:54 +0530

சாட்சி.1யை கல்லால் முதுகில் தாக்கியும், 2ம் எதிரி, சாட்சி.4 மண்வெட்டியால் தலை மற்றும் இடது கைகட்டை விரலில் தாக்கியும் 5ம் எதிரி, சாட்சி.4யை தென்னைமட்டையால் வலது பக்க தொடையில் தாக்கியும், 1ம் எதிரி, சாட்சி.3 சோலைக்கவுண்டரை கருக்கருவாளால் தலை மற்றும் தாடையில் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுதியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 3ம் எதிரி பங்கு பெற்றதாகவும், 1ம் எதிரி, சாட்சி.2யை விறகு கட்டையால் வலது கை மணிக்கட்டில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 2, 3, 4, 5 பங்கு பெற்றதாகவும், எனவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 294(b) உ/இ 149, இ.த.ச. பிரிவு 323, இ.த.ச பிரிவு 323 உ/இ 149, இ.த.ச பிரிவு 324, இ.த.ச. பிரிவு 324 உ/இ 149, இ.த.ச பிரிவு 326, இ.த.ச பிரிவு 326 உ/இ 149ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, அம்மாபேட்டை காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 147ன் கீழும், 1, 2 , 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 148ன் கீழும், 1 முதல் 3 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 294(b)ன் கீழும், 4, 5 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(b) உ/இ 149ன் கீழும், 1, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323ன் கீழும், 2, 5 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323 உ/இ 149ன் கீழும், 1, 2, 4, 5ம் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 324ன் கீழும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவு 324 உ/இ 149ன் கீழும், 1ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவு 326ன் கீழும், 2, 3, 4, 5 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 326 உ/இ 149ன் கீழும் குற்றச்சாட்டினை வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்கள்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:26:57 +0530

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.5 வரையான சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–**

கடந்த 17.11.2019ம் தேதியில், 16.00 மணியளவில், அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, கன்னப்பள்ளி கிராமம் தொப்பபாளையம் காட்டூரில் உள்ள சாட்சி.1 அய்யம்மாளுக்கு சொந்தமான சொக்கநாதர் தோட்டத்தில் சாட்சி.1க்கும் 1 முதல் 5 எதிரிகளுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக சாட்சி.1 அய்யம்மாள் தரப்பினருக்கும் கலகம் விளைவிக்கவேண்டும் என்கிற பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமாக ஒன்று கூடியுள்ளனர் என்றும், சட்டவிரோதமான கூட்டத்தில் உள்ள 1, 2, 5 எதிரிகள், கருக்கருவாள் மண்வெட்டி போன்ற அபாயகரமான ஆயுதங்களை பயன்படுத்தி கலகம் செய்துள்ளனர் என்றும், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் சாட்சி.1யை 1ம் எதிரி தேவிடியா கண்டாரோலி என்றும், 3ம் எதிரி தேவிடியா என்றும், சாட்சி.4 மாதையனை 2ம் எதிரி கேனத்ககூதி என்று பொது இடத்தில் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தகாத வார்த்தையால் திட்டியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 4, 5 திரிகள் பங்கு பெற்றுள்ளதாகவும், 1ம் எதிரி, சாட்சி.2யை கையால் கன்னத்தில் அறைந்தும், 3ம் எதிரி, சாட்சி.1யை கையால் கன்னத்தில் அறைந்தும், மற்றும் 4ம் எதிரி, சாட்சி.1யை காலால் எட்டி உதைத்தும், மேற்படி சாட்சிகளுக்கு மொக்கை காயத்தை எற்படுத்தியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 2, 5 பங்கு பெற்றதாகவும், 4ம் எதிரி, சாட்சி.1யை கல்லால் முதுகில் தாக்கியும், 2ம் எதிரி, சாட்சி.4 மண்வெட்டியால் தலை மற்றும் இடதுகை கட்டை விரலில் தாக்கியும் 5ம் எதிரி, சாட்சி.4யை தென்னைமட்டையால் வலது பக்க தொடையில் தாக்கியும், 1ம் எதிரி, சாட்சி.3



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:26:59 +0530

சோலைக்கவுண்டரை கருக்கருவாளால் தலை மற்றும் தாடையில் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுதியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 3ம் எதிரி பங்கு பெற்றதாகவும், 1ம் எதிரி, சாட்சி.2யை விறகு கட்டையால் வலது கை மணிக்கட்டில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 2, 3, 4, 5 பங்கு பெற்றுள்ளனர்.

4.2 கடந்த 17.11.2019 ஆம் தேதியன்று அம்மாபேட்டை காவல் நிலைய தலைமை காவலர் செந்தில்குமார் என்பவர் ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மேற்படி அய்யம்மாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.242/2019, இ.த.ச பிரிவு 143, 294(b), 323, 324, 506(ii) மற்றும் 379 பிரிவுகளின் கீழ் அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

4.3 பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய உதவி ஆய்வாளர் சிவாஜி என்பவர் சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான கோபாலன் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜரும், அ.சா.ஆ.9 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 மண்வெட்டி, அ.சா.பொ.2 கருக்கருவாள், அ.சா.பொ.3 கல், அ.சா.பொ.4 தென்னம் பட்டை, அ.சா.பொ.5 தடி ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி, அ.சா.ஆ.10 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

4.4 பின்னர் சாட்சிகள் அய்யம்மாள். ஆனந்தன், சோலை கவுண்டர் மாதையன், துரையன். கோபாலன் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், அவரது புலன் விசாரணையிலிருந்து சம்பவயிடத்திற்கு வந்த வெங்கிடு, பூபதி மற்றும் மயிலி ஆகியவர்கள் கொண்டிருந்தவர்களை விலக்காட்ட முற்பட்டார்கள் என்றும் அவர்கள் யாரையும் திட்டவோ, தாக்கவோ இல்லை



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:03 +0530

என்றும் தெரிய வந்ததாலும், வாதி அய்யம்மாளின் கழுத்தில் இருந்த 2 –1/4 பவுன் தங்க சங்கிலியை யாரும் திருடிக் கொண்டு செல்லவில்லை என்று தெரிய வந்ததாலும், மேற்படி சம்பவத்தில் கலகத்தை விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சாட்சி அய்யம்மாள் மற்றும் சாட்சிகள் ஆனந்தன், சோலை கவுண்டர், மாதையன் ஆகியோர்களை எதிரிகள் தகாத வார்த்தையால் திட்டி, கையாலும், காலலும், அபயாகரமான ஆயுதங்களால் தாக்கினால் மரணம் விளைவிக்கப்படும் என்று அறிந்தும் பொருட்களால் தாக்கியதால் ஆனந்தனுக்கு கொடுங்கயாமும், அய்யமாளுக்கு சாதாரண காயமும் ஏற்பட்டதாலும், சட்டப்பிரிவை இ.த.ச 143, 294(b), 323, 324, 147, 148, 326, 149 ஆகிய பிரிவுகளாக மாற்றி அ.சா.ஆ.11 சட்ட பரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், எதிரிகள் ராஜா, அஜித், நந்தினி, அருள்ஜோதி அர்ஜீனன் ஆகியவரும் ஈரோடு மாவட்ட முதன்மை அமார்வு நீதிமன்றத்தால் முன்பிணை பெற்று விட்டதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்னர், கடந்த 20.01.2020ம் தேதியன்று எதிரிகள் ஐவர் மீதும் இ.த.ச 143, 294(b), 323, 324, 147, 148, 326, 149 ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிகளை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்று கூறினார்கள் இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார்கள். எதிரிகள் பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்கள்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 294(b) உ/இ 149, இ.த.ச. பிரிவு 323, இ.த.ச பிரிவு 323 உ/இ 149, இ.த.ச பிரிவு 324, இ.த.ச. பிரிவு 324 உ/இ 149, இ.த.ச பிரிவு 326, இ.த.ச பிரிவு 326 உ/இ 149ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:05 +0530

7. **தீர்வு**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 17.11.2019ம் தேதியில், 16.00 மணியளவில், அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, கன்னப்பள்ளி கிராமம் தொப்பபாளையம் காட்டூரில் உள்ள சாட்சி.1 அய்யம்மாளுக்கு சொந்தமான சொக்கநாதர் தோட்டத்தில் சாட்சி.1க்கும் 1 முதல் 5 எதிரிகளுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக சாட்சி.1 அய்யம்மாள் தரப்பினருக்கும் கலகம் விளைவிக்கவேண்டும் என்கிற பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமாக ஒன்று கூடியுள்ளனர் என்றும், சட்டவிரோதமான கூட்டத்தில் உள்ள 1, 2, 5 எதிரிகள், கருக்கருவாள் மண்வெட்டி போன்ற அபாயகரமான ஆயுதங்களை பயன்படுத்தி கலகம் செய்துள்ளனர் என்றும், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் சாட்சி.1யை 1ம் எதிரி தேவிடியா கண்டாரோலி என்றும், 3ம் எதிரி தேவிடியா என்றும், சாட்சி.4 மாதையனை 2ம் எதிரி கேனத்தகூதி என்று பொது இடத்தில் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தகாத வார்த்தையால் திட்டியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 4, 5 திரிகள் பங்கு பெற்றுள்ளதாகவும், 1ம் எதிரி, சாட்சி.2யை கையால் கன்னத்தில் அறைந்தும், 3ம் எதிரி, சாட்சி.1யை கையால் கன்னத்தில் அறைந்தும், மற்றும் 4ம் எதிரி, சாட்சி.1யை காலால் எட்டி உதைத்தும், மேற்படி சாட்சிகளுக்கு மொக்கை காயத்தை எற்படுத்தியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 2, 5 பங்கு பெற்றதாகவும், 4ம் எதிரி, சாட்சி.1யை கல்லால் முதுகில் தாக்கியும், 2ம் எதிரி, சாட்சி.4 மண்வெட்டியால் தலை மற்றும் இடது கைகட்டை விரலில் தாக்கியும் 5ம் எதிரி, சாட்சி.4யை தென்னைமட்டையால் வலது பக்க தொடையில் தாக்கியும், 1ம் எதிரி, சாட்சி.3 சோலைக்கவுண்டரை கருக்கருவாளால் தலை மற்றும் தாடையில் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுதியுள்ளனர் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 3ம் எதிரி பங்கு பெற்றதாகவும், 1ம் எதிரி, சாட்சி.2யை விறகு கட்டையால் வலது கை மணிக்கட்டில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி சம்பவத்தின்போது பொதுவான நோக்கத்தினை



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:08 +0530

நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோதமான கூட்டத்தில் 2, 3, 4, 5 பங்கு பெற்றதாகவும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

8. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கு எதிரிகளால் குற்றமுறு நோக்கத்துடன் ஒன்றுகூடவில்லை என்றும், தகாத வார்த்தையால் திட்டவில்லை என்றும், சாதாரண காயம் மற்றும் கொடுங்காயம் ஏற்படவில்லை என்றும், ஆகவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதம் புரிந்தார்.

9. இவ்வழக்கில் அ.சா.1 அய்யம்மாள் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சியாகவும், அ.சா.2 ஆனந்தன், அ.சா.3 சோலைகவுண்டர், அ.சா.4 மாதையன் அ.சா.6 துரையன் கண்ணுற்ற சாட்சிகளாகவும், அ.சா.5 கோபாலன் பார்வை மகஜர் சாட்சியாகவும், அ.சா.7 சத்தியமூர்த்தி மருத்துவராகவும் மற்றும் அ.சா.8 திரு. கார்த்தி புலன்விசாரணை அதிகாரியாக அரசு தரப்பில் முன்னிலைபடுத்தப்பட்டுள்ளார்கள்.

10. குற்ற வழக்குகளில், அரசு தரப்பு தாம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாலேயே அவர் குற்றவாளி ஆகிவிடமாட்டார். குற்றச்சாட்டை ஆதரிக்கும் நம்பகமான, ஒருமித்த மற்றும் சட்டபூர்வமான சாட்சியங்கள் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும். மேலும், சாட்சியங்களில் சந்தேகம் அல்லது முரண்பாடு இருந்தால் அதன் பயன் எதிரிக்கே வழங்கப்பட வேண்டும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். மேலும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி, ஒரு குறிப்பிட்ட உண்மையை நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of Proof) அந்த உண்மையை கூறுகின்ற தரப்பினரிடமே உள்ளது. குற்ற வழக்குகளில் எதிரி குற்றம் செய்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:10 +0530

நிரூபிக்க வேண்டிய கடமை முழுமையாக அரசு தரப்பினரிடமே உள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

11. **<u>எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**இ.த.ச பிரிவு 294(b) பின்வருமாறு கூறுகிறது.**

(ஆ) ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசபாடல்கள் கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற அல்லது மொழிகிற எவராயினும் மூன்று மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

11.1 மேற்படி பிரிவின் படி சாட்சி.1யை 1ம் எதிரி தேவிடியா கண்டாரோலி என்றும், 3ம் எதிரி தேவிடியா என்றும், சாட்சி.4 மாதையனை 2ம் எதிரி கேனத்தகூதி என்று பொது இடத்தில் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தகாத வார்த்தையால் திட்டியுள்ளார்களா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 அய்யம்மாள் தனது சாட்சியத்தில், 1 முதல் 5 ஆஜர் எதிரிகள் தங்கள் பங்காளி முறை என்றும், கடந்த 18.09.2019 (சாட்சி தேதி மாற்றி தான் கூறினார்) தேதியன்று மாலை சுமார் 4.00 மணியளவில் 1ம் எதிரி ராஜா தங்களுக்கு பாத்தியப்பட்ட பொது கிணற்றில் மோட்டார் மாற்றிக் கொண்டிருந்தபோது தானும், தனது கணவரும் அவரிடம் ஏன் பொது கிணற்றில் தங்களை கேட்காமல் மோட்டார் மாற்றுகிறீர்கள் என்றும், பழைய மோட்டார் என்னாயிற்று என்று கேட்டதற்கு எதிரிகள் அப்படித்தான் நாங்கள் செய்வோம் என்று கூறி 3ம் எதிரி நந்தினி தனது முடியை பிடித்து இழுத்து தனது தலையில் அடித்தும், பின்னர் 4ம் எதிரி அருள்ஜோதி கையில் வைத்திருந்த தென்னை பட்டையால் கையில் அடித்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:14 +0530

11.2 மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் அணிந்திருந்த செயினை அருள்ஜோதி பறித்துக்கொண்டதாகவும், பட்டியல் சாட்சி 4 மாதையன் மற்றும் பட்டியல் சாட்சி 3 சோலைக்கவுண்டர் வந்தும், 3, 4 சாட்சிகள் வந்தவுடன் எதிரிகளிடம் ஏன் பொது கிணற்றில் தன்னை கேட்காமல் மோட்டார் அமைத்தீர்கள் என கேட்டார் அப்போது 1ம் எதிரி ராஜா கத்தியால் தனது அப்பாவின் நாக்கு மற்றும் முகத்தை அறுத்துவிட்டதாகவும், 2ம் எதிரி அஜீத் தனது தம்பி மாதையன் தலையில் மண் வெட்டியால் வெட்டிவிட்ட அப்போது மேற்படி சாட்சி.2 மனது கணவர் சம்பவ இடம் வந்தும், வெங்கடேஷ் மற்றும் பூபதி, ஆனந்தாய் மூன்று பேரும் சேர்ந்து தனது கணவரின் கையை முறித்துவிட்டதாகவும், பின்னர் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக தான் தனது கணவர் 2, 3, 4 சாட்சிகளை பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.3 மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், பின்னர் நாங்கள் ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்தபோது அம்மாபேட்டை போலீசார் மருத்துவமனை வந்து நடந்த விபத்தை தன்னிடம் கேட்டு வாக்குமூலமாக பதிவு செய்து தன்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சொத்துக்களால் தான் எதிரிகள் தன்னையும், பட்டியல் சாட்சி 2 முதல் 4 வரையிலான சாட்சிகளையும் மண் வெட்டி அ.சா.பொ.1, கருக்கருவாள் அ.சா.பொ.2, கல் அ.சா.பொ.3, தென்னை பட்டை அ.சா.பொ.4, தடி அ.சா.பொ.5 அடித்ததாக அடையாளம் காட்டுவதாகவும், தான் மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.4 அ.சா.2 ஆனந்தன் தனது சாட்சியத்தில், 1 முதல் 5 ஆஜர் எதிரிள் தங்கள் பங்காளி முறை என்றும், அ.சா.1 அய்யம்மாள் தனது மனைவி என்றும், கார்த்திகை மாதம் 1—ம் தேதி கடந்த 2019—ம் வருடம் மாலை சுமார் 4.00 மணியளவில் தங்களுக்கும் எதிரிகளுக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட கிணற்றில் 1ம் எதிரி ராஜா தங்களிடம்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:16 +0530

சொல்லமால் மோட்டார் மாற்றிக் கொண்டிருந்தபோது, அந்த இடத்தில் அவரது உறவினர்கள் அனைவரும் இருந்ததாகவும், 1ம் எதிரியிடம் தானும், தனது மனைவியும் ஏன் தங்களிடம் கூறாமல் மோட்டார் மாற்றுகீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் நாங்கள் அப்படித்தான் மாற்றுவோம். எங்களுக்கு தடம் விட மாட்டோம். கிரயம் செய்து கொடுக்க மாட்டோம் என்று கூறினார்கள் என்றும், 1ம் எதிரி ராஜா பட்டியல் சாட்சி 4 மாதையனை மண் வெட்டியால் தலையில் வெட்டினார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.5 மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், அ.சா.1யை 4ம் எதிரி அருள்ஜோதி தலை முடியை பிடித்து கன்னத்தில் அறைந்தும், அவர் மயங்கி விழுந்தவுடன் அ.சா.1 கழுத்தில் அணிந்திருந்த 2 ½ பவுன் தங்க சங்கலியை பிடிங்கி கொண்டும், அ.சா.1–யை ஆனந்தாய், மைதிலியும் அடித்தும், பூபதியும், வெங்கிடுவும் தனது இடது கையை பிடித்து மடக்கி பெருவிரலை உடைத்துவிட்டதாகவும், எதிரிகள் அனைவரும் தன்னையும், அ.சா.1, பட்டியல் சாட்சி 3 மற்றும் 4 ஆகியோர்களை மாற்றி மாற்றி அடித்தும், பின்னர் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக தானும், தனது மனைவி அ.சா.1, 3, 4 சாட்சிகள் பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தும், பின்னர் தாங்கள் ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்தபோது அம்மாபேட்டை போலிசார் மருத்துவமனை வந்த நடந்த விபத்தை தன்னையும், தன் மனைவியிடம் கேட்டு வாக்குமூலமாக பதிவு செய்து தன் மனைவியிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டதாகவும், தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருட்களால் தான் சம்பவத்தின் பொழுது தங்களை தாக்கினார்கள் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.6 அ.சா.3 சோலைகவுண்டர் தனது சாட்சியத்தில், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை சுமார் 04.00 மணியளவில் பொது கிணற்றில் 1ம் எதிரி ராஜா தனியாக மோட்டார் மாட்டிக் கொண்டிருந்தபோது, தானும், தனது மகன் பட்டியல் சாட்சி.4 மாதையன் என்பவரும் எதிரி ராஜாவிடம் கேட்டபோது, ராஜா சோலை கவுண்டரது மருமகன் ஆனந்தனை தடியால் வலது கையின் மீது அடித்தும், எதிரி ராஜா அ.சா.பொ.2



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:19 +0530

கருக்கருவாளால் தனது குரல்வளையை அறுத்தும், தனது மகள் ஐயம்மாளின் கழுதிலிருந்த சங்கிலியை ராஜாவின் மகள் அறுத்துக் கொண்டு தனது மகளை கல்லால் அடித்துவிட்டதாகவும், குரல்வளையை அறுத்ததால் தான் மயங்கிவிட்டதாகவும், அதனால் மற்ற சம்பவங்கள் குறித்து தனக்கு தெரியவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.7 அ.சா.4 மாதையன் தனது சாட்சியத்தில், தான் தனது அக்கா தோட்டத்திற்கு சென்றபோது, எதிரி ராஜா தனது அக்கா கணவர் ஆனந்தனை அடித்துக் கொண்டிருந்தார் என்றும், 5ம் எதிரி அருள் தனது அக்கவின் சங்கிலியை பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார் என்றும், தான் ஏன் தனது அக்காவின் சங்கிலியை பிடித்து இழுக்கிறீர்கள் என்று கேட்டபோது, 2ம் எதிரி மண்வெட்டியால் தனது தலையில் அடித்துவிட்டார் எ்றும், அதில் மயக்கம் அடைந்த தான் அப்படியே படுத்துவிட்டேன் என்றும் கூறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

11.8 அ.சா.6 துரையன் தனது சாட்சியத்தில், தனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

11.9 அ.சா.7 மருத்துவர் சத்தியமூர்த்தி தனது சாட்சியத்தில், கடந்த 17.11.2019 ஆம் தேதியன்று மாலை சுமார் 18–40 மணியளவில் அந்தியூர், பி.கே.புதூர், கண்ணம்பள்ளி கிராமம், தொப்பம்பாளையத்தை சேர்ந்த ஆனந்தன் மனைவி அய்யம்மாள் என்பவரும் அய்யம்மாளின் கணவரான ஆனந்தன் மற்றும் மயிலம்பாடி கரடிப்பாளையம் பச்சை பள்ளியைச் சேர்ந்த பெரிய சோலை கவுண்டர் மகன் சோலை கவுண்டர் மற்றும் சோலை கவுண்டரின் மகன் மாதையன் ஆகியோர்கள் அன்றைய தினம் மாலை 17–00 மணிக்கு தங்களது தோட்டத்தில் இருந்தபோது தங்களுக்கு நன்கு தெரிந்த சிலர் தங்களை கையாலும். காலாலும் கட்டை மற்றும் கல் மண்வெட்டியால் அடித்ததில் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்ததாகவும், அவர்களை பரிசோதித்தபோது அதில் மாதையன் என்பவருக்கு விபத்து பதிவேட்டு எண். Sl. NO.1328768 பதிவு செய்யப்பட்டும், அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்காணும்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:21 +0530

காயங்கள் காணப்பட்டதாகவும், 1.வலது கால் முட்டியில் வீக்கம் மற்றும் வலி இருந்ததாகவும், 2. தலையில் 5x1 செமீ அளவில் சிராய்ப்புக் காயமும், 3. இடது கைபெருவிரலில் 2x1 செமீ அளவில் சிராய்ப்புக்காயமும், காணப்பட்டதாகவும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என அ.சா.ஆ.4 மாதையனின் பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று வழங்கியதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.10 மேற்படி சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில், எதிரிகள், தங்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ ஆதனால் மேற்படி சாட்சிகளுக்கு அவமானம் ஏற்பட்டதாகவோ அவர்களது சாட்சியத்தில் எங்கும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 சோலைகவுண்டர், அ.சா.4 மாதையன் அ.சா.6 துரையன் ஆகியோரும் மேற்படி சாட்சிகளை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ ஆதனால் மேற்படி சாட்சிகளுக்கு அவமானம் ஏற்பட்டதாகவோ எங்கும் குறிப்பிட்டு சாட்சியமளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர். அரசு தரப்பில் இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்தும், அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரிகளுக்கு எதிரான இதச.பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

**12. <u>எதிரி மீதான இ.த.ச.பிரிவு 323ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**இ.த.ச பிரிவு 323 பின்வருமாறு கூறுகிறது.**

பிரிவு 334 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தவிர தன்னிச்சையாகக் காயம் விளைவிக்கும் எவரொருவரும் ஓர் ஆண்டு வரை



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:25 +0530

நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டின் ஒன்றோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபாதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

12.1 சாட்சி ஆனந்தை எதிரி ராஜா கையால் கன்னத்தில் அறைந்தும், சாட்சி அய்யம்மாளை எதிரி நந்தினி கையால் கன்னத்தில் அரைந்தும், சாட்சி அய்யம்மாளை எதிரி அருள்ஜோதி காலால் எட்டி உதைத்தும் மொக்கை காயம் ஏற்படுத்தியுள்ளார்களா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 அய்யம்மாள் தனது சாட்சியத்தில், 3ம் எதிரி நந்தினி எனது முடியை பிடித்து இழுத்து எனது தலையில் அடித்தார் என சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், எதிரிகள் அனைவரும் என்னையும், அ.சா.1 பட்டியல் சாட்சி.3, 4 ஆகியோர்களை மாற்றி மாற்றி அடித்தார்கள் என சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.3, 4 அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.1யை சிகிச்சை பார்த்த மருத்துவர் அ.சா.7 அவரது வலது முழங்கையில் சிரய்பு காயமும், வீக்கமும் காணப்பட்டது. உடல் முழுவதும் தொடால் வலி ஏற்பட்டது என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து அ.சா.1 சாட்சியமும், அ.சா.2 முதல் 4 சாட்சியங்களும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.1ன் சாட்சியமும் அ.சா.7 மருத்துவர் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

12.2 சாட்சி ஆனந்தை எதிரி ராஜா கையால் கன்னத்தில் அரைந்தாரா என பரிசீலனை செய்கையில், அ.சா.2 ஆனந்த் தனது சாட்சியத்தில், எதிரிகள் அனைவரும் என்னையும் அ.சா.1, பட்டியல் சாட்சி.3 , 4 மாறி மாறி அடித்தார்கள் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.2யை சிகிச்சை பார்த்த மருத்துவர் தனது சாட்சியத்தில், அ.சா.1யை ராஜா கையில் அடித்ததாகவும், அவருக்கு கன்னத்தில் சிகிச்சை அளித்தததாகவும் சாட்சியமளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் 4 எதிரி ராஜா அ.சா.2



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:27 +0530

ஆனந்தை கன்னத்தில் அரைந்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

12.3 சாட்சி அய்யம்மாளை எதிரி அருள்ஜோதி காலால் எட்டி உதைத்து மொக்கை காயம் ஏற்படுத்தினாரா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி அருள்ஜோதி காலால் உதைத்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. 4ம் எதிரி அருள்ஜோதி கையில் வைத்திருந்த தென்னை பட்டையால் கையில் அடித்தார்கள் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1யை சிகிச்சை பார்த்த மருத்துவர் அ.சா.7 தனது சாட்சியத்தில், அ.சா.1க்கு கையில் காயம் இருந்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், 4ம் எதிரி அருள்ஜோதி அ.சா.1யை தலையை முடியை பிடித்து, கன்னத்தில் அறைந்தார் என சாட்சியமளித்துள்ளார். ஆனால், தென்னை பட்டையால் அடித்தது தொடர்பாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.3 மற்றும் அ.சா.4 4ம் எதிரி அ.சா.1யை தென்னை பட்டையால் அடித்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, 4ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 323ன் கீழ் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13. <u>**எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 324ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**</u>

**இ.த.ச பிரிவு 324 பின்வருமாறு கூறுகிறது.**

எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 324 இன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்களா என்பதை காண இ.த.ச பிரிவு 324 ஆனது காணுதல் அவசியம் ஆனது ஆகும். அதன்படி இ.த.ச பிரிவு 324 கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்ட எவர் எனும் ஒருவர் பிரிவு 334இல் சொல்லப்பட்டுள்ளவைகள் தவிர கொடிய ஆயுதத்தை கொண்டு தன்னிச்சையாக காயம் ஏற்படுத்தி இருக்க வேண்டும். தன்னிச்சையான காயம் விளைவித்தல் பற்றி இ.த.ச பிரிவு 321 கூறுகிறது. மேலும் காயம் என்பதை இ.த.ச பிரிவு 319 கூறுகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:31 +0530

13.1 மேற்படி பிரிவின்படி பரிசீலனை செய்கையில் வழக்கிற்கு அடிப்படையான புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் தனது புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புகார்வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

13.2 மாண்புமிகு உச்சநீதிமன்றம் Abdul Sayed VS State of Madras எனும் வழக்கில் பல்வேறு உச்சநீதிமன்ற வழக்குகளை சுட்டிக்காட்டி காயம்பட்ட நபரின் சாட்சியத்தை எவ்வாறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறி காயம்பட்ட நபரின் சாட்சியம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், உறுதியான காரணங்கள் அல்லது முக்கிய முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் இல்லாமல் காயம்பட்ட நபரின் சாட்சியத்தை நிராகரிக்கக்கூடாது என்று கூறியுள்ளது.

13.3 மேற்படி பிரிவின்படி பரிசீலனை செய்கையில், சாட்சி அய்யம்மாளை அருள்ஜோதி கல்லால் முதுகில் தாக்கினாரா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், 4ம் எதிரி கல்லால் முதுகில் தாக்கியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.2 முதல் 4 வரையான சாட்சிகளும் 4ம் எதிரி கல்லால் அ.சா.1ன் முதுகில் தாக்கியதாக சாட்சியம் அளிக்கவில்ல என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.1யை சிகிச்சை பார்த்த அ.சா.7 தனது சாட்சியத்தில், அ.சா.1 அய்யம்மாளுக்கு முதுகில் காயம் இருந்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, 4ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 324ன் கீழ் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13.4 சாட்சி மாதையனை எதிரி அஜீத் மண்வெட்டியால் தலை மற்றும் இடது கை கட்டை விரலில் தாக்கினாரா என பரிசிலனை செய்கையில், அ.சா.4 மாதையன் தனது சாட்சியத்தில், 2ம் எதிரி அஜித் மண்வெட்டியால் எனது தலையில் அடித்துவிட்டார் என சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், 2ம் எதிரி எனது தம்பி



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:33 +0530

மாதையன் தலையில் மண்வெட்டியால் வெட்டிவிட்டார் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 க்கு சிகிச்சை பார்த்த மருத்துவர் அ.சா.7 தனது சாட்சியத்தில், தலையில் 5x1 செமி அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.4 சாட்சியமும், அ.சா.1 சாட்சியமும் அ.சா.7 சாட்சியமும் ஒன்றுக்கொன்று அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டும் விதமாகவே அமைந்துள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13.5 சாட்சி மாதையனை எதிரி அர்ஜீனன் தென்னை மட்டையால் தாக்கினாரா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.4 தனது சாட்சியத்தில், எதிரி அர்ஜீனன் தென்னை மட்டையால் அடித்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.4யை சிகிச்சை பார்த்த மருத்துவர் மாதையனை தென்னை மட்டையால் தாக்கியதாக எங்கும் குறிப்பிடவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.4யை சாட்சியத்தை உறுதியூட்டும்விதமாக அ.சா.1, 2, 3 சாட்சியமளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, 5ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 324ன் கீழ் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13.6 சாட்சி சோலைகவுண்டரை எதிரி ராஜா கருக்கருவாளால் தலை மற்றும் தாடையில் தாக்கினாரா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரி ராஜா அ.சா.பொ.2 கருக்கருவாளல் எனது குறல்வளியை அறுத்தார். குறல்வளயை அறுத்ததால் நான் மயங்கிவிட்டேன் என சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.3யை சிகிச்சை அளித்த அ.சா.7 தனது சாட்சியத்தில் 4x1செ.மி அளவில் தாடையில் சிராய்பு காயம் காணப்பட்டது என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.3 சாட்சியமும், அ.சா.7 சாட்சியமும் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டும் விதமாகவே அமைந்துள்ளது. மேலும், அ.சா.1 எதிரி ராஜா கத்தியால் எனது அப்பாவிற்கு நாக்கு மற்றும் முக்கை அறுத்துவிட்டார் என்றும், அ.சா.2 தனது சாட்சியத்தில், 1ம் எதிரி பட்டியல் சாட்சி.4 மாதையனை மண்வெட்டியால் தலையில் வெட்டினார் என சாட்சியமளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:36 +0530

14. **<u>எதிரி மீதான இ.த.ச.பிரிவு 326ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**பிரிவு 326 இதச பின்வருமாறு கூறுகிறது.**

ஆபத்தான ஆயுதங்கள் (துப்பாக்கி, கத்தி போன்றவை), அல்லது மரணத்தை ஏற்படுத்தும் கருவிகளைப் பயன்படுத்தி கடுமையான காயம் விளைவித்தல் எவரொருவரும் ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

14.1 சாட்சி ஆனந்தனை எதிரி ராஜா விறகு கட்டையால் வலது கை மணிக்கட்டில் தாக்கி கொடுங்கயாத்தை ஏற்படுத்தியுள்ளாரா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.2 தனது சாட்சியத்தில், பூபதியும் வெங்கிடுவும் எனது கையை பிடித்து மடக்கி பெருவிரலை உடைத்துவிட்டார்கள் என சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 யை சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.7 இடது ஆள்காட்டி விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என சாட்சியமளித்துள்ளார்.

14.2 மேலும், அ.சா.2 சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக அ.சா.1 தனது சாட்சியத்தில், வெங்கடேஷ் மற்றும் பூபதி, ஆனந்தாய் மூன்று பேரும் சேர்ந்து எனது கணவரின் கையை முறித்துவிட்டார்கள் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து அ.சா.2க்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆனால், மேற்படி எலும்பு முறிவானது அபாயகரமான ஆயுதத்தை பயன்படுத்தி ஏற்படவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, கு.வி.மு.ச பிரிவு 222 உட்பிரிவு 1ன் படி நிரூபணம் செய்யப்படவில்லை என்றாலும், சிறிய குற்றமான இ.த.ச பிரிவு 324ன் கீழ் வரும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

14.3 மேலும், இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் அரசு தரப்பு சாட்சிகளுக்கு கலகம் விளைவிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் சம்பவயிடத்தில் இல்லை


RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:38 +0530

என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், இந்த வழக்கு எதிர் எதிர் வழக்கு என்பதால் எதிரிகளுக்கு பொதுநோக்கத்துடன் கூடவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், ஏற்கனவே இ.த.ச பிரிவு 147 நிருபணம் செய்யப்படாததால் இ.த.ச பிரிவு 148ம் நிருபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

15. <u>அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில்,</u>

மேற்படி அ.சா.1 முதல் 8 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் எதிரிகள் அ.சா.1 முதல் 4 வரையான சாட்சிகள் மீது புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, CC 38/2021 என்கிற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆனால், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் மேற்படி முதல் தகவல் அறிக்கை எதற்காக பதிவு செய்யப்பட்டது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், மேற்படி சாட்சிகளை பரிசீலனை செய்கையில், எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி எதிரிகளுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பது குறித்தும் எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், இந்த வழக்கானது எதிர் எதிர் வழக்கு என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

15.2 மேலும், அரசு தரப்பு சாட்சிகள் ஒவ்வொன்றும் அரசு தரப்பு வழக்கை மிகைபடுத்தி கூறியுள்ளார்கள் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி அஜீத் தனது தம்பி மாதையன் தலையில் மண்வெட்டியால் வெட்டிவிட்டார் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 சோலைகவுண்டர் மற்றும் அ.சா.4 மாதையன் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அரசு தரப்பில் இந்நீதிமன்ற அனுமதியுடன்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:44 +0530

குறுக்கு விசாரணை செய்தும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

15.3 மேலும், Police Standing Order 566 இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி முறையாக பின்பற்றவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், இந்த வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், இந்த சம்பவமானது திட்டமிட்டு நடைபெறவில்லை என்பதும், இரு பிரிவினர்களுக்கு இடையே வாய்கராறு ஏற்பட்டு சண்டையாக மாறியுள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

15.4 மேலும், இந்த வழக்கில் The Aggressor யார் என்பதை புலன்விசாரணை அதிகாரி நிர்ணயம் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், புலன்விசாரணை அதிகாரி தனது விசாரணையை முழுமையாக முடித்தாரா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், எதிரிகளுக்கு ஏற்பட்ட காயம் குறித்து அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. இதுபோன்ற வழக்குகளில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Nand Lal vs The State Of Chhattisgarh என்கிற வழக்கில் பின்வருமாறு கூறியுள்ளது.

"12. …….It seems to us that in a murder case, the non-explanation of the injuries sustained by the accused at about the time of the occurrence or in the course of altercation is a very important circumstance from which the court can draw the following inferences:

> "(1) that the prosecution has suppressed the genesis and the origin of the occurrence and has thus not presented the true version;
> (2) that the witnesses who have denied the presence of the injuries on the person of the accused are lying on a most material point and therefore their evidence is unreliable;
>
> (3) that in case there is a defence version which explains the injuries on the person of the accused it is rendered probable so as to throw doubt on the prosecution case.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 18:27:48 +0530

15.5 மேற்படி முன்தீர்ப்பினை கருத்திற்கொண்டு பரிசீலனை செய்கையில், எதிரிகளுக்கு ஏற்பட்ட காயம் குறித்து எவ்வித சாட்சியமும் அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அ.சா.1 முதல் 4 வரையான சாட்சிகள் உறவினர்கள் என்பதாலும், அவர்கள் அக்கறையுள்ள சாட்சிகள் ஆவார்கள். மேலும், சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று முழுமையாக குறித்து அ.சா.1 முதல் 4 வரையான சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில், அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகளின் சாட்சியங்கள் உண்மையான சம்பவத்தை மறைத்துள்ளார்கள் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அவர்களது சாட்சியம் இந்நீதிமன்றம் நம்பும் வகையில் அமையவில்லை. இந்த வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் தூயகரங்களுடன் இந்நீதிமன்றத்தை அனுகவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

16. **முடிவாக,** இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 147ன் கீழும், 1, 2 , 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 148ன் கீழும், 1 முதல் 3 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 294(b)ன் கீழும், 4, 5 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(b) உ/இ 149ன் கீழும், 1, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323ன் கீழும், 2, 5 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323 உ/இ 149ன் கீழும், 1, 2, 4, 5ம் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 324ன் கீழும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவு 324 உ/இ 149ன் கீழும், 1ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவு 326ன் கீழும், 2, 3, 4, 5 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 326 உ/இ 149ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து **கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்தும்** தீர்ப்பளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள, பி.ஆர்.எண்.337/2019ல் கண்டுள்ள அ.சா.பொ.1 மண்வெட்டி, அ.சா.பொ.2 கருக்கருவாள், அ.சா.பொ.3 கல், அ.சா.பொ.4 தென்னம் பட்டை, அ.சா.பொ.5 தடி ஆகியவற்றை இவ்வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையின் இருப்பின் அது முடிந்த பின்னர், மேற்கண்ட வழக்குச் சொத்துக்களை அழித்திடவும், எதிரிகள் எழுதிக்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:27:52 +0530

கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 6ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:28:00 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.அய்யம்மாள். | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.2 | திரு.ஆனந்தன். | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.சோலைகவுண்டர். | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.மாதையன். | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | திரு.கோபாலன். | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | திரு.துரையன். | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.7 | திரு.சத்தியமூர்த்தி. | மருத்துவர் |
| அ.சா.8 | திரு.கார்த்தி | காவல் உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| அ.சா.ஆ. எண் | தேதி | சான்றாவணம் | யாரால் குறியீடு செய்யப் பட்டுள்ளது. | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.11.2019 | புகார் மனு. | அ.சா.1 | அசல் |
| அ.சா.ஆ.2 | 18.11.2019 | பார்வை மகஜர். | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.3 | 18.11.2019 | கைப்பற்றுதல் மகஜர். | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.4 | 17.11.2019 | மாதையனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.7 | நகல் |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:28:03 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.5 | 17.11.2019 | சோலைகவுண்டரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.7 | நகல் |
| அ.சா.ஆ.6 | 17.11.2019 | அய்யம்மாளின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.7 | நகல் |
| அ.சா.ஆ.7 | 17.11.2019 | ஆனந்தனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.7 | நகல் |
| அ.சா.ஆ.8 | 18.11.2019 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 | அசல் |
| அ.சா.ஆ.9 | 18.11.2019 | மாதிரி வரைபடம் | அ.சா.8 | அசல் |
| அ.சா.ஆ.10 | 18.11.2019 | படிவம் – 91 | அ.சா.8 | அசல் |
| அ.சா.ஆ.11 | 20.01.2020 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.8 | அசல் |

<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>: –

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | மண்வெட்டி. |
| அ.சா.பொ.2 | கருக்கருவாள் |
| அ.சா.பொ.3 | கல் |
| அ.சா.பொ.4 | தென்னம்பட்டை |
| அ.சா.பொ.5 | தடி |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u> – இல்லை –

<u>குறிப்பு:</u>

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 18:28:09 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1, பவானி.**